THE EDUCATION STATE

# நிதி உதவி
## நோயாளிகளுக்கான தகவல்

**விக்டோரியாவில் வசிக்கும் ஒவ்வொரும் குழந்தையும், வகுப்பறைக்கு அப்பால் கிடைக்கப்பெறுகின்ற அனைத்துக் கற்றல் வாய்ப்புகளையும் கட்டாயம் பெற வேண்டும். முகாம்கள், விளையாட்டுகள் மற்றும் சுற்றுலாக்களுக்கான நிதியானது (Camps, Sports and Excursions Fund), முக்கியமான, கல்விசார்ந்த மற்றும் கேளிக்கை நடவடிக்கைகளுக்காகத் தங்களுடைய சக மாணவ-மாணவிகளுடன் இணைவதற்கான வாய்ப்பை எந்த மாணவ-மாணவிகளும் தவறவிடாமல் இருப்பதை உறுதிசெய்ய உதவுகிறது. இது விக்டோரியாவை ஒரு கல்வி மாநிலமாக உருவாக்குவதன் ஒரு அங்கமாகும். மேலும், இது மாணவர்களின் பின்புலம் மற்றும் அவர்களின் திறன் வெளிப்பாடுகளுக்கு இடையே உள்ள இணைப்பைத் தகர்ப்பதற்கான அரசாங்கத்தின் பொறுப்பேற்பாகும்.**

### முகாம்கள், விளையாட்டுகள் மற்றும் சுற்றுலாக்களுக்கான நிதி (CSEF)

மாணவ-மாணவிகள் தங்கள் பள்ளிக்கு வெளியே சிறந்த அனுபவங்களைப் பெறுவதற்குப் பள்ளி முகாம்கள் உதவுகின்றன. உலகம் எவ்வாறு இயங்குகிறது என்பது குறித்து ஆழ்ந்து புரிந்துகொள்வதைச் சுற்றுலாக்கள் ஊக்குவிக்கின்றன. மேலும், குழுப்பணி, ஒழுக்கம் மற்றும் தலைமைப் பண்பு ஆகியவற்றை விளையாட்டுகள் கற்பிக்கின்றன. இவை அனைத்தும் ஒரு ஆரோக்கியமான பாடத்திட்டத்தின் அங்கமாகும்.

பள்ளிச் சுற்றுலாக்கள், முகாம்கள் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவுகளை ஈடுசெய்ய, தகுதியுள்ள குடும்பங்களுக்கு விக்டோரியா அரசாங்கம் CSEF-ஐ வழங்கி உதவி செய்யும்.

உங்களிடம் பணவசதிச் சோதனை செய்யப்பட்ட ஒரு செல்லுபடியாகும் சலுகை அட்டை இருந்தால் அல்லது நீங்கள் ஒரு தற்காலிக வளர்ப்புப் பெற்றோராக இருந்தால், நீங்கள் CSEF-ஐப் பெறுவதற்குத் தகுதிபெறக்கூடும். புகலிடம் கோருபவர்கள் மற்றும் அகதிகளின் குடும்பங்களுக்கும் கூட ஒரு சிறப்புப் பரிசீலனை வகைப்பிரிவு உள்ளது. உங்கள் பிள்ளையின் நன்மைக்காக, முகாம்கள், சுற்றுலாக்கள் அல்லது விளையாட்டு நடவடிக்கைகளுக்குத் தொடர்புடைய செலவினங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ள, இந்த ஈட்டுத்தொகை பள்ளிக்கு வழங்கப்படுகிறது.

ஒரு மாணவருக்கான வருடாந்தர CSEF தொகை:

- $125 - தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு
- $225 - உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு.

### எவ்வாறு விண்ணப்பிப்பது

CSEF விண்ணப்பப் படிவம் ஒன்றைப் பெறுவதற்கு, பள்ளியின் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும் அல்லது www.education.vic.gov.au/csef என்ற இணையத்தளத்திலிருந்து படிவத்தைப் பதிவிறக்கம் செய்துகொள்ளவும்

### மேல் விவரங்கள்

CSEF-க்கு விண்ணப்பம் செய்வதற்கான கடைசித் தேதிக்காகவும், இந்த நிதி உதவி குறித்து மேல் விவரங்களை அறிந்துகொள்வதற்கும், www.education.vic.gov.au/csef என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்



VICTORIA State Government